# முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிறப்பு நீதிமன்றம் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்.

## அரசு தரப்பு சாட்சி 10 (LW14) வாக்குமூலம்

## சிறப்பு வழக்கு எண்.7/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | மருத்துவர் அருண் | வட்டம் | - | |
| த/பெ | - | திரு.முனியன் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

இன்று 08.04.2025, 1969ம் ஆண்டு மத்திய சட்டம் 44ன் படி திருமதி. ஜெயந்தி Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

(எதிரி ஆஜர். )

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் முதுநிலை உதவி பேராசியராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 27.10.2020 அன்று முண்டியம்பாக்கம் அரசு மருத்துகல்லூரி மருத்துவமனையில் பணியில் இருந்த போது அனந்தபுரம் காவல் நிலைய குற்ற எண்.1696/2020ல் சம்மந்தப்பட்ட வழக்கில் மின்வேலயில் சிக்கி இறந்துபோன காசிநாதன் மகன் குப்பன் என்பவரை அனந்தபுரம் காவல் நிலைய தலைமை காவலர் 610 திரு.வெங்கடேசன் என்பவர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தினை பெற்று அவர் பிரேதத்தினை அடையாளம் காட்ட அன்று மதியம் 2.25 மணிக்கு நான் பிரேத பரிசோதனையை மேற்கொண்டேன்.

பிரேதத்தின் மேல் காணப்பட்ட இறப்பதற்கு முன்னால் ஏற்பட்ட காயங்கள்

1. வலது கால் முட்டியில் 10 x 8 x 0.25 cm அளவில் மின்சாரம் தாக்கியதால் ஏற்பட்ட காயம் விளிம்புகள் எரிந்து காணப்பட்டது.

2. இடது கால் முட்டியில் 12 x 11 x 0.25 cm அளவில் மின்சாரம் தாக்கியதால் ஏற்பட்ட காயம் விளிம்புகள் எரிந்து காணப்பட்டது.

3. வலது கால் நடுபகுதியில் 3ல் 1 பகுதியான இடத்தில் 14 x 7 x 0.5 cm அளவில் மின்சாரம் தாக்கியதால் ஏற்பட்ட காயம் விளிம்புகள் எரிந்து காணப்பட்டது.

4. இடது கால் நடுபகுதியில் 3ல் 1 பகுதியில் 15 x 7 x 0.5 cm அளவில் மின்சாரம் தாக்கியதால் ஏற்பட்ட காயம் விளிம்புகள் எரிந்து காணப்பட்டது.

5. மண்டை ஓட்டை பிரித்த போது மண்டை ஓடும் அதன் தோலும் நல்ல நிலையில் காணப்பட்டது.

6. மூளை சாதாரண அளவில் இருந்தது. அதன் வெட்டுப்பகுதி சிவந்து காணப்பட்டது. மூளை எலும்புகூட்டின் அடிப்பகுதியில் இயல்பாக இருந்தது.

7. கழுத்துபகுதி மற்றும் தோல் மற்றும் மேல்திசுக்கள் இயல்பான நிலையில் காணப்பட்டது.

8. நாவடி எலும்பு நல்ல நிலையில் இருந்தது.

9. நெஞ்சுபகுதியை திறந்து பார்த்தபோது நெஞ்சுகூட்டு எலும்பு இயல்பான நிலையில் காணப்பட்டது.

10. நுரையீரல் சாதாரணமாகவும் குறுக்குவெட்டுத்தோற்றத்தில் சிவந்தும் காணப்பட்டது.

11. இதயத்தின் இடதுபுறம் சிறு சிறு இரத்தகசிவு காணப்பபட்டது. இதயத்தின் வலப்புற அறையில் உறைந்த ரத்தம் காணப்பட்டது.

12. வயிற்றுப்பகுதியை திறந்து பார்த்தபோது இரைப்பையில் 500 கிராம் பாதி செறித்த உணவுப்பொருட்கள் எந்தவித வாசனையும் இன்றி காணப்பட்டது.

13. மற்ற அனைத்து உடல்உள்ளுறுப்புகளும் இயல்பான நிலையிலும் குறுக்குவெட்டுத்தோற்றத்தில் சிவந்தும் காணப்பட்டது.

பிரேத பரிசோதனை முடித்து உடல் உள்ளுறுப்புகள் சேகரம் செய்யப்பட்டு ரசாயன பகுப்பாய்விற்காக மண்டல தடய அறிவியல் துறைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. ரசாயன பகுப்பாய்வில் மதுவோ எந்தஒரு நச்சுப்பொருட்களோ காணப்படவில்லை என்று அறிந்து காணப்பட்டது. அந்த அறிக்கை என்னிடம் காணப்படுவது, அது அதசாஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எரிந்து காணப்பட்ட தோல்கள் எரிந்தும், சாதரண தோல்கள் சாதாரண நிலையிலும் இருந்ததாக கண்டறியப்பட்டது. அந்த Atopsy Report என்னிடம் காட்டப்படுவது, அது அதசாஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அதசாஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது இறுதி அறிக்கையில் மின்சார அதிர்ச்சியினால் அவர் இறந்திருக்ககூடும் என்று இறுதி கருத்துரை வழங்கினேன். அந்த இறுதி கருத்துரை அதசாஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை போலிசார் விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

இறந்துபோன குப்பன் பிரேத பரிசோதனைக்கு எத்தனை மணி நேரம் முன்னதாக இறந்திருக்ககூடும் என்று தோராயமாக நான் என் அபிப்பிராயத்தை பிரேத பரிசோதனை சான்றிதழில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

நீதிமன்ற கேள்வி

குப்பன் பிரேத பரிசோதனைக்கு எத்தனை மணி நேரம் முன்னதாக இறந்திருக்ககூடும் என்று பிரேத பரிசோதனை சான்றில் நான் அபிப்பிராயம் குறிப்பிடாததற்கு காரணம் என்ன?

பதில்:

மின்சாரம் தாக்கியதால் ஏற்படும் இறப்பில் பிணவிறைப்பு தன்மை மெதுவாகவோ அல்லது வேகமாகவோ ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதனால் இறப்பு எந்த காலகட்டத்திற்குள் நிகழ்ந்தது என்று அறுதியிட்டு குறிப்பிட இயலாது.

கேள்வி

பிணவிறைப்பு தன்மை உடலின் மேல்பகுதியில் காணப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது அதன் அடிப்படையில் இறப்பின் நேரம் கூறமுடியுமா?

பதில்

உடலின் கீழ்பகுதியில் பிணவிறைப்பு தன்மை காணப்படவில்லை, அதனால் அவர் பிரேத பரிசோதனைக்கு முன்பு தோராயமாக 12 முதல் 24 மணி நேரத்திற்குள் இறந்திருக்ககூடும் என்று கருத்து தெரிவிக்கிறேன்.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.